Nallur Branch Library

# கனடாவில் 40 ஈழத்தவரின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு!

கனடாவில் அகதி நிலை அந்தஸ்து கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழர்களில் 40 பேரினுடைய விண்ணப்பங்களை கனடிய உள்வரவு — வெளியகழ்வு திணைக்களம் நிராகரித்துள்ளது.

1989-ம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை அகதி அந்தஸ்து கோரி 1727 இலங்கைத் தமிழர்கள் கனடாவிற்கு சென்றனர்.

இந்த விண்ணப்பங் ளில் 974 பேரின் விண்ணப்பங்கள் மட்டுமே விசாரணைக்கு எடுக்கப்பட்டு ૪31 பே ரின் விண்ணப்பங்கள் பூரணவிசாரணையின் பின் ஏற்றுக் கொள்ளப்பட்டு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது.


அறவழி

NONVIOLENCE

அறம்: 4 மாத இதழ் பங்குனி 1990 பக்கம்: 4 விலை: 3-00 வழி: 31


### தலைவர் துரையின் அமெரிக்கப் பயணம்

## வெற்றியடைய வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறோம்

"சமூக சேவைக்கு இலக்கணமாகத் திகழ்ந்துகொண்டிருக்கும் அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் திரு. வி. சு. துரைராசா சென்றவிடமெல்லாம் தமிழ்மணம் கமழச் செய்வார்" என்று பனம் பொருள் அபிவிருத்திச்சபைபொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. வீ. ஜி. தங்கவேல் தெரிவித்தார்.

புலமைப்பரிசில்பெற்று அமெரிக்கா செல்லும் அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. வி. சு. துரைராசா அவர்களுக்கு அறவழி ஆசிரியர்கள், இயக்குனர்கள், தொண்டர்களால் நடத்தப்பட்ட விருந்துபசார வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்

அறவழிச் செயலாளர் திரு க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விருந்துபசார வைபவத்தில் திரு. தங்கவேலு மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: "துரைராசா போன்ற உண்மைத் தொண்டனை நாம் உலகில் எங்குப் காண முடியாது அவரின் சிந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம், பாலர் கல்வி பற்றி அக்கறைப் படுவதாக இல்லை!

## பாலர் ஆசிரியர் பயிற்சி ஆரம்ப விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி குற்றச்சாட்டு!

"எமது எதிர்காலத்தின் சிற்பிகளான பாலர்களின் கல்வி பற்றி அரசாங்கம்இதுவரையும் அக்கறைசெலுத்துவதாகவில்லை. ஆனால் அறவழிப் போராட்டக் குழு அரசாங்கம் போன்று பாலர்களுக்கு பாடசாலை அமைத்துக் கொடுத்தும், அதன் ஆசிரியர்களுக்கு காலத்திற்குக் காலம் பயிற்சிகளும் வழங்கிவருகின்றது." என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்படும் பாலர் ஆசிரியர் 4வது பாட பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

காந்தி நினைவரங்கில் அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. வி. சு. துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ் ஆரம்ப விழாவில் பேராசிரியர் க. சிவத்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசு அக்கறை செலுத்தாத பல விடயங்களை சமூக சேவை ஸ்தாபனங்கள் செய்து வருகின்றன. இவற்றிலே முன்மாதிரியாக அறவழிப் போராட்டக்குழு திகழ்கின்றது.

படசாலைக்கு போவதற்கு முன்னரே ஏதோ ஒரு கல்வி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறுவர் பயிற்சி நிறைவு நாள்

அறவழி [illegible] ல்லொழுக்க சிறுவர் பயி[illegible] நிறைவு விழா கடந்தமா[illegible] காந்தி நினைவரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

அறவழி சிறுவர் சழ ஒணைப்பாளர் திருமதி ராஜி சண்முகநாதன் மேற்பார்வையில் அறவழிச் செயலர் திருமிகு க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஆத்மஜோதி நா. முத்தையா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறுவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

### அறவழி செய்திகள்

#### காந்தி நினைவு அரங்கு

அறவழிப் போராட்டக்குழுவின் 11 ஆவது ஆண்டு விழாவையொட்டி குழுவின் பணிமனையில் 'காந்தி நினைவு அரங்கு' ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

செயலாளர் க. ஜீவகதாஸின் முயற்சியினால் அமைக்கப்பட்ட இவ்வரங்கில் அறவழிப் பயிற்சிகள், வகுப்புகள், சந்திப்புகள் போன்றவை நடைபெற்று வருகின்றன.

#### அறவழி விளையாட்டுக் கழகம்

இளைஞர் யுவதிகளிடையே விளையாட்டுத் திறனை வளர்க்கும் நோக்குடன் அறவழி விளையாட்டுக்கழகம் ஒன்று கைதடி நுணாவிலில் விரைவில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

#### கல்விச்சுற்றுலா

அறவழிப் பாலர் ஆசிரியர் பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட பயிற்சியாளர்கள் இம்மாதம் 9 ஆம் திகதி யாழ் குடாநாட்டிற்குள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார்கள்.

### மாணவர்களிடமிருந்து

## போதைவஸ்து, மதுபானம், புகைத்தல், பழக்கத்தை நீக்கவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடமுண்டு

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை, மதுபானப்பாவனை புகைபிடித்தல் போன்றவற்றினை தடை செய்வதற்கு ஆசிரியர்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

பாடசாலை மாணவனாக இருக்கும் பொழுதே போதைவஸ்து உட்பட மதுபான வகைகளுக்கு அடிமையாகின்ற நிலமை இன்றைய இளம் சந்ததியினருக்கு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பேராபத்துகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எமது ஆசிரிய சமுதாயத்தையே சேரும்.

ஒரு மாணவன் வழி தவறிச் செல்வதாக இருந்தால் அவனுக்கு நல்ல வழிகளைக்காட்டி அவனது வாழ்வில் ஒளியேற்ற வேண்டும்.

ஆசிரியர்களுடைய சில நடவடிக்கைகளை மாணவர்களும் பின்பற்றுகிறார்கள் என்பதனையும் ஆசிரியர்கள் உணர வேண்டும்.

ஒரு ஆசிரியர் வகுப்பறையில் படிப்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் சிகரெட் புகைப்பதால் அதனையே மாணவனும் பின் பற்றுவதற்கு துணிவான்

இதே போல மதுபானம் அருந்திவிட்டு பாடசலைக்கு செல்வதும், மாணவர் அறியக்கூடிய விதங்களில் மதுபானம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### எம்மைக் கொல்ல வேண்டாம்

## நுளம்புகள் முறையீடா?

அண்மையில் யாழ்நகரில் ஓர் சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது. பல அரச அதிகாரிகள், தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

சுகாதார வாழ்வின் முக்கியத்துவம் பற்றிக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மத்திய அரசின் சுகாதாரத் திணைக்கள இயக்குனர் ஒருவர் பிரதம அதிதியாகப் பங்கேற்றார்.

கருத்தரங்கில் பங்கு கொண்ட ஒரு அரச அதிகாரி, பிரதம அதிதியிடம் ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிவானந்த தேனமுதம்

நல்லதை நினை, நல்லதைப் பேசு, நல்லதைச் செய்: அழியாத ஆனந்த உலகத்தை நீ சீக்கிரம் அடைவாய்.

சாந்தமாக ஆனால் உறுதியாக, மிருதுவாக, ஆனால் துணிச்சலாக, பணிவாக ஆனால் தைரியமாக எளிமையாக ஆனால் கண்ணியமாக இரு.




உனக்கு வெளியே எதிரிகள் இல்லை. உனது உண்மையான எதிரிகள் அகங்காரம், பொறுமை, பேராசை, கோபம், மனோ விகாரம், சுய நலம் முதலியனவே.

எல்லோரிடமும் அன்பாயிரு, எல்லோரையும் நேசி. எல்லோருக்குந் தொண்டு செய். எல்லோரிடமும் பெருந்தன்மையாகவும் பொறுமையாகவும் நடந்து கொள். ஏழைகளிடமுந் தாழ்த்தப்பட்டவர்களிடமுங் கடவுளைக் கண்டு அவர்களுக்குத் தொண்டு செய், கடவுள் உன்னிடம் அத்யந்தப் பிரியம் கொள்வார். நீ சாகா நிலையும் அடைவாய்.

அன்பாகவும், பிரியமாகவும் இருப்பது ஒரு தர்மம். தனக்குச் செய்த தவறை மறப்பதும் மன்னிப்பதுந் தர்மம். துயருறுபவனுக்கு ஒரு அன்பான வார்த்தை சொல்வதுந் தர்மம்.

தொகுப்பு: "ஜீரா"

# இதனைப் படித்துவிட்டு மிகுதியை நூறு சொற்களுக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்

ஒருநாள், அது பங்குனி நாள். பங்குனி மாதம் நல்ல வெயில் காலம்தானே! அந்த நாளிலே வயலிலே கூலிவேலை செய்து கொண்டு சில வயோதிபப் பெண்கள் (ஆச்சிமார்) வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வீடோ ஒரு மைல்கல் தொலைவில் உள்ளது. பசி மயக்கம் ஒரு புறம், வேலை செய்த களைப்பு ஒருபுறம். சேர்ந்து போய்வருகிறார்கள். வழியிலே ஒரு வீட்டில் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடிக்கிறார்கள். மீண்டும் நடையைத் தொடர்கிறார்கள். ஒரு கோவிலில் பூஜை நடைபெறுகிறது.

அங்கு செல்கிறார்கள். பூஜை முடிந்தால் பிரசாதம் வாங்கியுண்டு பசியாறலாம் என்று நினைக்கிறார்கள். அன்று ஒரு பெரியபணக்காரரின் பூசையல்லவா. தடபுடல்கள — இவர்கள் வரிசையாக இல்லாமல் மர நிழலில் குந்திக் கொண்டு இருக்கிறார்கள். எப்போது பிரசாதம் வருமென்று .....

சரி தம்பி தங்கைகளே! இந்தச் சம்பவக் கதையினை நிறைவு செய்து அனுப்பி வையுங்கள். அந்தக் கூலிப் பெண்களுக்கு பிரசாதம் கிடைத்ததா? ... அவர்களுக்கு என்ன நடந்தது ... எங்கே உங்கள் மனச்சிற... விரியுங்கள், எழுதுங்கள் பார்ப்போம்.

இராஜியக்கா:

# மகா சிவராத்திரி

சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்கள் பேரின்பம் பயப்பன, சிவ விரதங்களுட் சிறந்தது மகாசிவராத்திரி. இவ் விரதம் மாசித் திங்கள் தேய்பிறை பதின்நான்காம் நாள் அனுட்டிக்கப்படும். பெப்ரவரி இருபத்து மூன்றாம் திகதி கண்ணுக்கிய நல்ல கடவுளைத் தொழ நண்ணி வருகிறது மகாசிவராத்திரி. முன்னொரு காலத்தில் பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என்ற சண்டை மூண்டது. இவர்களின் அகந்தையை அடக்குவதற்குச் சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அப்பொழுது "நீங்கள் இச் சோதிப்பிழம்பின் அடியையும் முடியையுங் காணுங்கள். அடியையோ அல்லது முடியையோ யார் முதலிற் காண்கிறார்களோ அவரே பெரியவர். என ஓர் அசரீரி கேட்டது. உடனே பிரமா அன்ன வடிவமெடுத்து முடியைத் தேட மேலே பறந்து சென்றார். விஷ்ணு பன்றியாகப் பூமியை அகழ்ந்து அடியைத் தேடமுயன்றார். இருவர் முயற்சியும் பலிக்கவில்லை. அவர்களின் அகந்தையும் அழிந்தது.

சிவபெருமான் சோதிப்பிழம்பாய்த் தோன்றிய இரவே மகா சிவராத்திரியாகும். இவ் விரதத்தின் போது உபவாசம் இருந்து நான்கு சாமமும் நித்திரை விழித்து சிவ பூசை செய்தல் வேண்டும். நான்கு சாமமும் நித்திரை விழிக்க முடியாதவர்கள் மூன்றாம் சாமமாகிய இலிங்கோற்பவகாலத்தில் நித்திரை விழிக்க வேண்டும். சிவ பூசை செய்ய முடியாதவர்கள் நான்கு சாமமும் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும்.

நித்திரை விழிப்பதற்காக வீண் பொழுது போக்குகளில் காலத்தைச் செலவிடாது பஞ்சாட்சர செபம் செய்தும் சிவ புராணம் படித்தும் இறை பஜனை செய்தும் கேட்டும் காலத்தைச் செலவிட வேண்டும்.

பொ. முருகதாஸ்
ப. ம கு — மிருசுவில்

மகாசிவராத்திரிக்குஒப்பான வேறு சிறந்த விரதம் எதுவும் இல்லை. இந்த விரதத்தை அனுட்டித்தவர்களுக்கு பயம் துக்கம் என்பன இல்லை. மகா சிவராத்திரி விரதத்தைஅனுட்டிப்பவர்கள். முத்தி அடைவது நிச்சயம்.

அன்று ஒரு நாள் இரவு அதுவும் ஒரு சிவராத்திரி நாள். ஒரு காட்டில் ஒரு வேடனைப் புலியொன்று துரத்திச் சென்றது. வேடன் ஓடிப்போய் ஒரு வில்வ மரத்தில் ஏறிக் கொண்டான். வேடன் நித்திரை மயக்கத்தால் தான் கீழே விழாமல் இருப்பதற்காக வில்வமர இலைகளை ஒவ்வொன்றாக ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். பொழுது விடிந்தது. மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். அவன் அறியாமலே இரவு முழுவதும் சிவலிங்கத்திற்கு வில்வத்தினால் அர்ச்சனை செய்திருந்தான். அதனால் முத்தியடைத்தான். நாமும் இம் மகாசிவரத்திரி விரதத்தை மேற்கொண்டு முத்தியின்பம் பெறுவோமாக?

# என்னருமைத் தம்பிதங்கைகளே

என்னருமைத் தம்பி தங்கைகளுக்கு

இராஜி அக்காவின் அன்பு வணக்கங்கள். கடந்த மாசி மாதம் 23ந் திகதியை எவரும் மறந்திருக்க மாட்டீர்கள் என நினைக்கின்றேன். இந்து சமய மக்கள் அனைவரும் புனிதமகா சிவராத்திரியை அன்று தான் விரதமாக அனுட்டித்துக் கொண்டாடினார்கள். மகாசிவராத்திரியைப் பற்றிப் பல விதமானசமயக்கதைகள் உள்ளன. எது எப்படி இருந்தாலும் அன்று இறைவன் உண்டு என்ற உண்மை புலப்பட்டிருக்கிறது. இதுவேநாம்கண்டபயன். அந்த உண்மை ஒளியாகத் தோன்றியுள்ளது. அதையே நாமும்பெறுவதற்கு வருடா வருடம் அந்த மகா சிவராத்திரி நாளிலே திடசங்கற்பம் கொண்டு இறை தியானம் செய்தால் பலன் உண்டு என்பது எமது சமயச் சான்றாகும்.

இம்முறை தம்பி முருகதாஸ் மகா சிவராத்திரியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி அனுப்பியுள்ளார். உங்களுக்கு அது தெரிந்தும் இருக்கலாம். இருந்தாலும் தெரியாத தம்பி தங்கைகளுக்கும் பயன் தரும் என்பதால் மழலைப் பூக்களில் சேர்த்துள்ளோம்.

தம்பி தங்கைகளே!

விளையாட்டுப் போட்டிகள் எல்லா இடங்களிலும் நடைபெற்றுவருகின்றன அல்லவா? உங்கள்விளையாட்டுப்போட்டி அனுபவங்கள் நிறைய இருக்கலாம். "என்னைக்கவர்ந்த விளையாட்டுப் போட்டி" என்னும் தலைப்பில் 150 சொற்களுக்கு மேற் படாமல் கட்டுரை எழுதி "(புல்ஸ்கப்தாளில் ஒரு பக்கம் மாத்திரம் மட்டும்)"

மழலைப்பூக்களுக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த கட்டுரை பிரசுரிக்கப்படும். புத்தகப் பரிசிலும் கிடைக்கும்.

மழலைப் பூக்கள் நடாத்திய "அறவழிப் பொது அறிவுப்" போட்டியில் பரிசு பெற்ற தம்பி தங்கைகள் 24 - 2 - 90 சனி தினம் பிற்பகல் நடைபெற்ற அறவழிச் சிறுவர் நல்லொழுக்கப் பயிற்சி நிறைவு விழாவில் ஆ மஜோதிப் பெரியார் உயர் திரு. நா. முத்தையா அவர்களிடமிருந்து பெறுமதிமிக்க புத்தக பரிசில்களைப் பெற்றார்கள். ப்பரிசில்களை அறவழிப் புதிய சமுதாய வெளியீட்டகம் வழங்கியது. அவர்களுக்கு நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

# ஆன்மா வளர்ச்சியடைய!

ஆன்மாவை வளர்ச்சியடையச் செய்வது எப்படி ?

என்னுள்ளே உள்ள மிருகத்தன்மையைப் புனிதப் படுத்த வேண்டும். மனிதத் தன்மையைப் பணிவு மயமாக்கவேண்டும். தேவாம்சத்தை அன்பு மயமாக்க வேண்டும்.

புனிதத் தன்மை பெறவேண்டின் எல்லாவிதத் துன்பங்களையும் ஏற்றுப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும்.

பணிவுமயமாக விளங்கவேண்டுமாயின் பெருமை என்ற எண்ணத்தை வேரறக் கிள்ளி வீசி எறிய வேண்டும். அன்புமயமாகத் திகழவேண்டுமாயின் எவர் மீதும், வெறுப்போ, விரோதமோ கொள்ளாது எல்லோர் மீதும் — விரோதிகள் மீதும் அன்பு செலுத்த வேண்டும்.

ஆன்மீக வளர்ச்சிக்குத் துன்பமே மகோன்னத உணவாகும். துன்பமின்றேல் வளர்ச்சியுமில்லை. வாழ்வும் விரிவடையாது. ஒருவன் துன்பமே நுகரவில்லையாயின் அவனுடைய வாழ்க்கை கெட்ட வாழ்க்கையேயன்றி வேறில்லை.

எனவே தான், தான் அதிகமாக நேசிக்கின்றவர்களை இறைவன் பற்பல சோதனைக்குள்ளாக்குகின்றான்.

— டால்ஸ்டாய் —

# அறிஞர்கள் பேசுகிறார்கள்

- வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்து கொள்கிறார்கள். வறுமைக் காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்து கொள்கிறோம்.

— சட்டன் காலின்ஸ் —

- உலகில், குற்றமில்லாத ஒரே ஒரு மனிதனுண்டு; அவன் இன்னும் பிறக்கவில்லை.

மண்ட் —

- உனக்குத் தெரியாததை, தெரியாதென்று ஒப்புக்கொள்வதற்குப் பெயர் தான் அறிவு.

— கன்பூசியஸ் —

- பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகிறோம்: அதோடு புதுப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கிறோம். இ நாட்டின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

— வால்டேர் —

- தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயங்காதே! தோல்வியிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

— லெனின் —

- ஆயிரம் வருடம் மௌனமாக நின்ற மரம் விழும்போது காடே அதிரும் படி செய்து விடும்.

— ர கின் —

- நாளுக்கொரு பயத்தை வெல்லாதவன், வாழ்க்கையின் முதல் பாடத்தையே கல்லாதவன்.

— மெர்சன் —

தொகுப்பு : கேகே

# போர்

- "அம்மா போர் என்றால் என்ன?" எனக் கேட்கக்கூடிய ஒ பிள்ளையைப் பிரசவிக்க வேண்டும் எனக் கனவு காண்கிறேன்.

— ஈவ் மேரியாம்.

- "சிறுவர்களும், மிருகங்களும் போரை விரும்புவதில்லை வளர்ந்தவர்களும், முதலைகளுமே போரை விரும்புகின்றனர்.
- அமைதி வானில் உள்ளன. ஒவ்வொருவராலும் இதனை அடைய முடியும். இதனை யாராலும் திருட முடியாது. அமைதியை மேலும் எல்லோரும் இவ் உலகில் அனுபவிக்கலாம்.
- போர் ஓர் அத்தியவசியமான காரியம் என்பதை ஒரு நிமிடமேனும் யாராவது உங்களைச் சிந்திக்கத் தூண்டும்படி அனுமதியாதீர்.

★ உள்ளே நுழையுமுன் வெளியே வருவதைப்பற்றி யோசி ★

# இதுதான் எங்கள் உலகம்

க. சச்சிதானந்தன்

அரசியலுக்குப் பல கட்சிகள்; பொருள்வளம் பெருக்கச் சங்கங்கள், கூட்டுறவுகள், நிறுவனங்கள், ஆன்மீகம், தத்துவம் சமயம் இவை பேண, மனமாற்றச் சபைகள், கழகங்கள்; இலக்கிய வட்டங்கள், எழுத்தாளர் கழகங்கள், தமிழ்ச் சங்கங்கள் தமிழ் ஆராய்ச்சி மன்றங்கள், தொழிலாளர் நலம் பேணத் தொழிற் சங்கங்கள், தொழிலாளர் அணிகள், இசை, கலை, நாட்டியம், நடனம், திரைப்படம் இவைக்குக் கழகங்கள், சபாக்கள் சுவைஞர் வட்டாரங்கள்.

ஊர் முன்னேற்றப் படிப்பகங்கள், அறிவகங்கள், நூல் நிலையங்கள், அவை நடாத்தக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், அணிகள்; இப்படி வாழ்வின் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுப் பணிபுரியும் இயக்கங்கள் தமிழரிடையே உண்டு. முக்கியமான ஒரு துறையில் தமிழர் அக்கறை காட்டவில்லை. இயக்கம் அமைக்கவில்லை; கூட்டம் கூடவில்லை; கலந்துரையாடவில்லை.

அறிவியல்துறை வளர்ச்சிக்கு, ஆராய்ச்சிக்கு, தமிழர் சழகம் அமைக்கவில்லை; ஆராய்ச்சி மாநாடுகள் கூட்டவில்லை. தமிழ் அறிவியலாளர்கள் ஆங்கிலத்தில் தான் அறிவியல் துறையில் வளர்ச்சியடைந்து வருகிறார்கள். ஆங்கில மொழி மூலம் தான் ஆராய்ச்சிக்கும், அறிவு பரம்பலுக்கும் முயற்சி செய்கிறார்கள். தமிழ் அறிவியலாளர்கள் ஒன்று கூடவில்லை. தம்மை அடையாளம் காணவில்லை. சங்கமோ கழகமோ, மன்றமோ அமைக்கவில்லை.

எனவேதான், தமிழர்களிடையே பறவையியற் கழகங்கள் இல்லை. பறவையியலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பிற மொழிப்பறவையியல் கழகங்களுடன், பிற நாட்டுப் பறவையியல் கழகங்களுடன், தொடர்பு கொண்டு உறுப்புரிமை பெற்றுள்ளார்கள்.

தமிழ் நிலத்தில் பறவைகள் உண்டு. பறவையியலாளர்கள் உண்டு. ஆனால் பறவையியல் கழகங்கள் இல்லை. பறவையியல் பற்றிய சஞ்சிகைகள் இல்லை பறவையியல் பற்றிய தமிழ் நூல்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

உலகின் பல மொழிகளில் ஆண்டு ஒன்றிற்குப் பறவையியலைப் பற்றி மட்டும் 4000 கட்டுரைகள் வெளிவருகின்ற இன்றைய உலகில், தமிழில் எதுவும் வெளிவராதமை, மனித நாகரிக ஓட்டத்தில் கலக்காமல் தமிழர் பின்தங்கி விடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விடலாம்.

பறவையியலாளர்கள் கூடுவது, கழகம் அமைப்பது, கருத்துப்பரிமாறுவது, சஞ்சிகை வெளியிடுவது, உலகில் உள்ள முன்னேறிய நாடுகள் அனைத்திலும் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சியாகும். சாதாரண பறவைப்பிரியர்கள் தொடக்கம் கற்றுத்துறைபோகிய பறவை ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் வரை இக் கழகங்களில் உறுப்புரிமை வகிக்கின்றார்கள்.

சத்திமுற்றப் புலவர் இன்று வாழ்ந்திருப்பின் உலகின் தலைசிறந்த பறவையியலாளர்களுள் ஒருவராகக் கணிக்கப்பட்டிருப்பார். தமிழ்ப் பறவையியலாளர்கள் சார்பில் அனைத்துலகப் பறவையியலாளர் மகாநாட்டில் கலந்து கொண்டிருப்பார். சத்திமுற்றப் புலவரின் அவதானங்கள் அனுபவங்கள் உலகப் பறவையியலாளர்கட்கு அறிவிக்கப்பட வேண்டியவை. அவரின் எழுத்துக்கள் இலக்கியச் சுவை காணப்படுவதுடன் அமைந்து விட்டமை தமிழரின் அறிவியல் சார்பின்மையையே காட்டுகின்றது.

"இயற்கை வரலாறு பற்றிய அமெரிக்க அரும் பொருட் காப்பகம்" நியூயோக்கில் உளது. இவர்கள் பறவையியல் பற்றியும் பல்வேறு பணிகளைப் புரிகின்றனர். இரண்டாம் உலகப் போரின் முடிவில் இவர்கள் நல்ல பணி ஒன்றைச் செய்தனர். போர்த்தளங்களில் ஒன்றாகப் பயன்பட்ட அமெரிக்கக் கரைபோரத் தீவுகளுள் ஒன்றை அரசிடம் இருந்து குத்தகைக்கு எடுத்தனர். பறவைகளின் காப்பகமாக, இயற்கை அரும் பொருட்காப்பகமாக மாற்றி அமைத்தனர்.

பறவையியலாளர்களின் ஆராய்ச்சிக்குரிய திறந்த வெளி ஆய்வுகூடமாக இன்று இத்தீவு திகழ்கின்றது. தீவில் மக்கள் வாழ்வதில்லை. பறவையியலாளர்கள் 19 பேர் அங்கேயே வாழ்கின்றார்கள். முழுநேர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். வேறெந்த ஊதியமும் அவர்களுக்கு இல்லை.

பறவைகள்...... பறவைகள் ...... பறவைகள் இது தான் அவர்களின் சிந்தனை, செயல், கற்பனை, பேச்சு, எழுத்து எல்லாமே!

பலமாடிக் கட்டிடங்கள்: பலவித பொழுது போக்குகள்: குழாயில் நீர்: கம்பிவழி மின்சாரம்: வானொலி; நாளிதழ்; தொலைக்காட்சி, திரைப்படம்: கண்காட்சிகள், ஏனைய கவர்ச்சிகள், சுவையும் ஆறுதலும் நிறைந்த வாழ்க்கை, எங்கே?

தீவில் அல்ல, அமெரிக்காவின் நகரங்களில், வேகமான வாழ்க்கை.

"அருமையான அந்த வாழ்வை விட்டு இந்தத் தீவில் தன்னந்தனியாக உலகத் தொடர்பின்றி வாழ்கின்றீர்களே! அந்த நல்ல உலகை மறந்து விட்டீர்களே" என அந்தத் தீவில் உள்ள பறவையியலாளர்களிடம் கேட்டால் .........

அவர்கள் பறவைகளைக் காட்டுகின்றார்கள். பாடுகின்றார்கள்.

"இது தான் எங்கள் உலகம் ...... எங்கள் உலகம் ...... இது தான் எங்கள் உலகம்" ...

# போருக்கு விடை கொடுத்தால்....

ஒரு நவீன டாங்கி வாங்கத் தேவையான பணத்தால் 80 லட்சம் பேர்களுக்கு ஒரு நாள் உணவு அளிக்க முடியும் அல்லது 30,000 குழந்தைகளுக்கு கல்வி கற்க 1,000 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கலாம் ஒரு நவீன போர் விமானத்திற்காகும் செலவில் 40,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கலாம்.

ஒரு அணு ஆயுத நீர் மூழ்கிக் கப்பல் வாங்குவதற்கு உண்டான பணத்தில் 23க்கு மேற்பட்ட ஏழை நாடுகளில் கல்வித் திட்டத்திற்கான மொத்தச்செலவையும் செய்ய முடியும். இன்று உலகில் ஒவ்வொரு லட்சம்மக்களுக்கும் 536 இராணுவத்தினர் வீதம் உள்ளனர். ஆனால் 85 டாக்டர்கள் தான் உள்ளனர். ஒரு இராணுவ வீரனுக்குத் தேவையான வருடாந்தபோர்ச் செலவு ரூபாய் 5,70,000 என்றால் ஒரு மாணவனுக்கு வேண்டியது ரூபாய் 4,130 மட்டுமேயாகும்...

உலகில் சமாதனம் நிலவச் செய்தல், சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் பாதுகாத்தல், சரியான வழியில் பொருளாதார மாற்றம் ஏற்படச் செய்தல் இவை மூன்றும் தான் வரும் நமது தலைமுறைக்காக நாம் செய்யக் கூடிய முக்கிய பணிகளாகும். போர் ஏற்பட்டால் இந்த மூன்று இலட்சியங்களும் நிச்சயமாகத் தகர்க்கப்பட்டு விடும்......

அமெரிக்காவும், ரஷ்யாவும் மோதினால் நமக்கென்ன என்று விபரம் தெரியாத சில மக்கள் இருக்கலாம். இனி ஒரு யுத்தம் மூண்டால் அது அந்த யுத்தத்தில் ஈடுபட்ட மக்களை மட்டுமன்றி; நாடுகளை மட்டுமன்றி உலகில் அனைத்து ஜீவராசிகளையும் ஒட்டு மொத்தமாக அழித்துவிடும். ......

## உலகில்....

| | |
|---|---|
| O பட்டினி கிடப்போர் | 50 கோடி |
| O மருத்துவ சிகிச்சை பெறாதோர் | 150 கோடி |
| O கடுமையான பஞ்சத்தில் உழல்வோர் | 100 கோடி |
| O வேலையற்றோர் | 50 கோடி |
| O எழுத்தறிவற்றோர் | 81.4 கோடி |
| O பாடசாலை செல்லாத பிள்ளைகள் | 30 கோடி |
| O சுத்தமான தண்ணீர்கூடக்கிடைக்காதவர்கள் | 200 கோடி |

# செல்வா நினைவுநாளில் தமிழர் பிரதேசமெங்கும் நாதஸ்வர இசை ஒலிக்க வேண்டும்

தமிழர், தலைவர், தந்தை செல்வ நாயகத்தின் 93-வது ஜனன தினம் 31-3-1990 லும், நினைவுதினம் 26-04-90 லும் சிறப்பாக கொண்டாடப் படவும், நினைவு கூரப்பட வேண்டியதும் ஈழத்தமிழ் மக்களின் கடமையாகும்.

இதனையொட்டி நினைவுக் கட்டுரைகளும், நினைவுப் பிரசுரங்களும் வெளியிடப்பட வேண்டும்.

இதே போல சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் 9-வது சிரார்த்த தினமும் தந்தையின் ஜனன தினத்தில் வருகிறது. இது குறித்தும் சிரத்தையெடுக்கப்பட வேண்டும்.

இந் நாட்களில் தந்தை செல்வாவிற்கு பிடித்தமான நாதஸ்வர இசை தமிழர் பிரதேசமெங்கும் ஒலிபரப்ப வேண்டும்.

திரைப்பட மாளிகைகள், உணவுச்சாலைகள், ஒலிப்பதிவு நிலையங்கள், வீடியோ தொலைக்காட்சி நிலையங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் இந்த நாதஸ்வர இசையை ஒலிபரப்பி தந்தை செல்வா அவர்களை நினைவு கூர வேண்டும்.

க. தருமரத்தினம்:
நக்கா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,

# அறவழி நூலகத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும்

— செயலாளர் ஜீவா உரை

"அறவழிப் போராட்டக் குழுவானது பல்வேறு செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றியடைந்துள்ளது. அதே போல குழு நடத்தும் நூலக திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறியே தீரும்" என்று மேற்படி குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

அறவழி பொது நூலகத்தில் நடைபெற்ற நூலக அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. ஜீவகதாஸ் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது; "அறவழி நூலக சேவை என்பது ஒரு முன்னோடியான திட்டமாகும். இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு நூலக சபையிடமே உண்டு.

1981-ம் ஆண்டு சிறுகச் சிறுக ஆரம்பித்த அறவழி நூலகம் இன்று பெரிய ஒரு பொது நூலகமாக இயங்குவதுடன் சிறுவர்களுக்கென ஒரு தனித்துவமான நூலகத்தையும் கொண்டு மிகச்சிறப்பான முறையிலே இயங்கி வருகின்றது.

கச்சாய் பொது நூலகத்திலும் எமது ஆதரவில் கடந்த வருடம் ஒரு சிறுவர் நூலகத்தை ஆரம்பித்து வைத்துள்ளோம். மேலும் இவ்வருடம் 15 கிராமங்களில் நூலகங்கள் அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

கிராமங்களுக்குச் சென்று நாங்கள் விதைக்கும் விதை செடியாக வளர்ந்து பூத்துக் குலுங்கி பயன்தரச் செய்ய வேண்டிய பொறுப்பு அந்தந்த கிராம மக்களையே தான் சாரும். இதற்கு தண்ணீர் ஊற்றுபவர்களாகத் திகழப் போகிறார்கள் இந்த நூலக சபையினர் தான்

நூலகசபை உறுப்பினர்கள்

அறவழி நூலக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திருமிகு. ச. நடேசபிள்ளை, செயலாளர் திருமிகு என். கே. துரைசிங்கம், உறுப்பினர்கள் திருவாளர்கள் ப. செல்லத்துரை, அ. சிவசிங்கம், க. ஜீவகதாஸ், வி. சு. துரைராசா, பொ. கந்தையா.

★ அன்பினால் சிங்கத்தின் மீசையைக்கூட பிடிக்க முடியும் ★

Nallur Branch Library



அறவழி
NONVIOLENCE

அறமுரசு

மனிதன் மாமனிதனாக மகானாக வாழாவிட்டாலும், குறைந்த பட்சம் நல்ல மனிதனாக வாழவேண்டும்.

— நபிகள் நாயகம்

# அறநோக்கு

## மனித நேயம்???

மனித நேயம் பற்றி இப்போதெல்லாம் அடிக்கடி பேசப்பட்டு வருகின்றது. மனித நேயம் வாழ்கின்றதா? அல்லது மரணித்து விட்டதா? என்ற கேள்விகள் கூட, மனிதர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

உலகில் மனிதன் — மனிதனாகப் பிறக்கின்றான் — மனிதனாகவே இறக்கின்றான். மனிதனின் பிறப்புக்கும் — இறப்புக்கும் இடையில், . மனிதனின் வாழ்வில் எத்தனையோ அலைகள், வீசுகின்றன. பயங்கரமிக்க சம்பவங்கள் - இன்பம், துன்பம், எல்லாமே நிகழ்கின்றன.

மனிதனாகப் பிறந்து விட்டவன் தன் வாழ்வில் ''மனித நேயத்தை'' ப் பேணிக்காத்து, மதித்து, போற்றி வந்துள்ளானா? இல்லையா?. என்பதை அவன் வாழ்வே உணர்த்தும்

மனித நேயம் என்றால் என்ன? அது எங்கே விற்கப்படுகின்றது? என்ன விலை? என்று கேட்கக் கூடியவர்களும் வாழ்கின்ற சமுதாயத்தில் — மனிதநேயத்தின் முக்கியத்துவங்களையும், அவசியங்களையும்—மக்கள் மத்தியில் புகட்டப்படுதல் முக்கியமானதாகும்.

உலகில் மனிதன் எத்தனையோ வேடங்களில் தோன்றுகின்றான். குடும்பத்தலைவனாக! ஆசிரியனாக; தொழிலாளியாக; புத்திஜீவியாக; கலைஞனாக, எழுத்தாளனாக; சிற்பியாக, மருத்துவனாக, அதிகாரியாக; ஆட்சித்தலைவனாக;

இவ்விதம் மனிதன் எனப்பட்டவன் வாழ்கையில் பல்வேறு விதமான படிநிலைகளில் வாழ்ந்து வருகின்ற போதிலும் — எல்லாமே முக்கியத்துவமிக்கதாகத் தோன்றுகின்றன.

ஆயினும் மனிதன் எப்படிநிலைகளில் வாழ்ந்தாலும் ''மனித நேயம்'' மட்டும் ஒன்றாகவே இருக்கும்

ஆனால், மனிதனிடம் ''மனித நேயம்'' காணப்படுகின்றதா? என்பதைப் பற்றி ஆழமாகப் பார்த்தல் வேண்டும்.

மனிதனிடம் இருக்கக்கூடிய மனிதத்தன்மை, மனிதாபிமானம் ஏன் வளர்ச்சியடையவில்லை? என்பதுபற்றி அனைவருமே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனித நேயத்தைப் பற்றி மக்களுக்கு, நன்கு எடுத்துக் கூறி. மனித நேயத்தைப் போற்றி வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மனிதன் எப்படிப்பட்டவன் வாழ்க்கையில் எந்தப் படிநிலையில் வாழ்ந்தாலும் -

**மனிதன் — மனிதனாக — மனிதத்தன்மையோடு - மனித நேயத்தோடு வாழ்கின்றானா? என்பதையே பார்த்தல் வேண்டும்.**

சமுதாயம் என்னும் ஆலமரம் பெரு விருட்சமாக வளர வேண்டுமாயின், அங்கே வாழ்கின்ற மனிதர்கள் மத்தியில் மனித நேயம் வளர்க்கப்படல் வேண்டும் என்பதே அறவழி ஆதங்கமாகும்.

## அரசாங்கம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்திற்கு செல்ல வேண்டிய தேவை நமது சமுதாயத்திற்கு ஏற்பட்டுவிட்டது.

இந்தத் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்றளவிற்கு அரசாங்கம் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை.

மத்திய அரசு இந்த விடயம் பற்றி சிந்திக்கா விட்டாலும் மாநிலங்களுக்கு பொறுப்பான அமைப்புகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்கப்படுகின்றபோது பிரதேச சபைகளாவது இதில் அக்கறை எடுத்து செயல்பட வேண்டும் என்று பொது ஸ்தாபனங்கள் எதிர் பார்க்கின்றன.

அறவழி கல்விப்பகுதி இயக்குனர் திரு. கே. கோபால கிருஷ்ணன் பயிற்சியின் நோக்கம் பற்றி விளக்கிக் கூறினார்.

# அறவழி நூலகங்களுக்கு

# 'நூல்கள் வழங்குக'

கிராமங்கள் தோறும் நூலகம் அமைக்கும் பணியில் அறவழிப் போராட்டக்குழு தனது கவனத்தைச் செலுத்தி வருவதனால் ஆங்காங்கே திறக்கப்படும் நூலகங்களுக்கு நூல்களை வழங்கி உதவுமாறு அன்பர்கள், நண்பர்கள். ஆதரவாளர்கள் கேட்கப்படுகின்றார்கள்.

உங்கள் குழந்தையின் பிறந்த நாள் நினைவாகவோ அல்லது இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக நூல்களை அன்பளிப்புச் செய்யலாம்.

நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் கைதடி நுணாவிலிலுள்ள அறவழிப் பணிமனை, அல்லது அறவழி மத்திய நூலகம், ஆங்காங்கே திறக்கப்படும் கிராமிய நூலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

நூல் நிலையங்களுடைய தேவை இன்றைய சமுதாயத்தினரால் உணரப்பட்டுள்ளதால். இதனை அவர்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு எம்முன்னால் உள்ளது என்பதனை உணர்ந்து அதற்கு அயராது உழைத்துவருகின்றோம்.

அறவழிப் போராட்டக்குழு அமைக்கும் கிராமிய நூலகத்துடன் சிறுவர்களுக்கெனவும் சிறுவர் நூலகம் ஒன்றும் திறந்து வைக்கப்படுகிறது

இவ்வருடம் பதினைந்து நூலகங்கள் அமைப்பதற்கு அறவழிப் போராட்டக்குழு திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே கச்சாய் பகுதியில் ஒரு சிறுவர் நூலகமும் கைதடி நுணாவில், கண்டி வீதியில் பொதுநூலகம், சிறுவர் நூலகம் என்பன ஆரம்பிக்கப்பட்டு அவை செயற்பட்டு வருகின்றன.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை நூலகம் அமைப்பதற்காக பதினைந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிலே கைதடி காரைநகர், பிட்டியெல்லை ஆகிய கிராமங்களின் நூலகம் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்த சிறந்த பணி மேலும் சிறக்க நூலகம் ஆரம்பிக்கப் படவிருக்கும் கிராமங்களிலுள்ள மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் தேவையாக இருக்கிறது.

ஆரம்பிக்கின்ற நூலகங்கள் தான் சார்ந்த மக்களுக்கு தொண்டு செய்வதற்கு போதிய நூல்களை தொடர்ச்சியாக அன்பளிப்பு செய்யுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

## மாணவர்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருந்துவதையும் பாடசாலை வகுப்பறைகளில் புகைப்பதையும் ஆசிரியர்கள் நிறுத்தவேண்டும்.

சில ஆசிரியர்கள் மாணவனை கடைகளுக்கு அனுப்பி சிகரெட் எடுத்து புகைப்பதனையும் அவதானிக்கிறோம். இதன் தாக்கம் பற்றி ஆசிரியர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

ஒரு மாணவனானவன் தன் குருவான ஆசிரியரை பின்பற்றி நடப்பதையே விரும்புகிறன். ஆசிரியர், என்ன உடை உடுக்கிறார்' என்ன செய்கிறார் என்பதனையெல்லாம் பார்த்து தானும் அது போல் செய்வதற்கு உந்தப்படுகிறான்.

போதை வஸ்து பாவனையைதடுப்பது தொடர்பாக 'அடிக்' நிறுவனம் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் 50 ஆசிரியர்களுக்கு 'சக்தி' திட்டத்தின் கீழ் கருத்தரங்கு நடாத்தியது.

இக் கருத்தரங்கின் நோக்கம் போதைவஸ்து, மதுபான பாவனை, புகைத்தல் போன்றவற்றிலிருந்து ஆசிரியர்களை விடுபடச் செய்வதேயாகும்.

எங்கள் எதிர் கால நாட்டின் சிற்பிகளாக திகழப்போகும் இளம் சந்ததியினரை கட்டியெழுப்பும் பொறுப்பினை எமது ஆசிரிய சமுதாயம் சிறந்து முறையில் செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறோம்.

## தலைவர்...

(1ஆம் பக்கந் தொடர்ச்கி)

தனை, செயல் என்பன யாவும் எமது மக்களைப் பற்றியதேயாகும்

சாதாரண ஒருகிராமசேவையாளனாக இருந்து அவர் எமது சமூகத்திற்கு ஆற்றி வரும் பங்களிப்பு அளப்பெரியது.

மற்றவர்களுடைய துன்பங்களிலே கைகொடுப்பது, பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது தினமும் யாருக்காவது உதவி செய்வது அவரது நாளாந்த கடமைகளில் சிலவாகும்,

காலையில் எழுந்து மோட்டார் சைக்கிளை எடுக்கின்ற பொழுது அதற்குள் நிரம்ப பெற்றோல் இருந்தால்தான் துரைராஜா மகிழ்ச்சியடைவார். ஏனென்றால் எவ்வளவு பெற்றோல் இருக்கிறது அவ்வளவிற்கு அவரது அன்றைய சேவை பலருக்குக் கிடைக்கும்.

ஒரு மனிதன் வாழ்க்கையில் ஏதோஒருதுறையில் முன்னேறுகிறன் என்றால் அவனுக்கு பின்னணியில் நின்று வளர்ந்து விட்ட பெருமை அவனது மனைவியையே சாரும்.

இந்த வகையில் திரு. துரைராஜாவுக்கு அமைந்த திருமதி ஒரு வெகுமதி என்றே சொல்ல வேண்டும். அதனால்தான் அவர் எமது சமூகத்தின் உயர்ந்த பெறுமதியாகத் திகழ்ந்து வருகிறார்.

அவரது பயணம் வெற்றியடையவும், அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ்மக்களுக்குப்பணியாற்றவும் அறவழி சார்ந்த அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்தித்து வழியனுப்பி வைப்போம்.'

செல்விகள் இ. சிதம்பரப்பிள்ளை, எஸ். சாந்திநிலா, கி மங்கையர்க்கரசி, திருவாளர்கள் கே.கோபாலகிருஷ்ணன், ச. தங்கராசா, என் சே. துரைசிங்கம் ஆகியோரும். திரு. துரைராசாவை வாழ்த்தி உரையாற்றினர்கள்.

திரு. துரைராசா பதிலுரை வழங்கினார்.

## எம்மைக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

'' யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நுளம்பின் தொல்லை அதிகரித்துள்ளது சுகாதாரத் திணைக்களம் நுளம்பு கொல்லி நடவடிக்கைகளை ஏன் மேற்கொள்ளவில்லை? நுளம்புகள் தம்மையும் கொல்ல வேண்டாமெனத் திணைக்களத்திடம் முறையீடு செய்து கொண்டுள்ளதா? என மக்கள் கேட்கின்றனரே?'' என்றார்.

''நாட்டிலுள்ள மக்களின் சுகாதாரத்தைப் பேணும் அதிகாரம் சுகாதாரத் திணைக்களத்துக்கு மட்டும் தான் சொந்தமானதல்ல. நாட்டில் நுளம்பின் தொல்லை அதிகரித்துக் கொள்கின்றது என்றால். அதன் பொறுப்பாளிகள் மக்களே அன்றி சுகாதாரத் திணைக்களம் மட்டுமல்ல, என்பதை மக்களை உணரச்செய்தல்வேண்டும்: எதற்கெடுத்தாலும் திணைக்களங்கள் தான் செய்ய வேண்டும் என்றால் மக்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?'' எனப் பிரதம அதிதி விடையளித்தார்.

அத்தோடு ''டீ. டீ.ரி பவுடர் அடிப்பவர்கள் மக்களின் வீடுகளுக்குச் சென்றால்! ''வீட்டுக்கு உள்ளே அடிக்க வேண்டாம்'' வீட்டைச் சுழற்றி அடித்து விட்டுப்போ'' என்றும், சொல்பவர்களும், ''அவர்களை அடுத்த வீட்டில் கண்டால், வீட்டைப் பூட்டிப் படலையைக் கட்டி விட்டு வேறு இடங்களுக்குப் போய்விடுபவர்களும் மக்கள் தான்'' என்று கூறிய பிரதம அதிதி,

''மக்கள் இவ்விதம் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு, மற்றவர்களைக் குறை சொல்லிக் கொண்டிருந்தால். சுகாதாரம் பேணப்பட்டு விடுமா?'' எனவும் கேட்டார்.

''மக்களுக்காகத் தான் சுகாதாரமே ஒழிய, சுகாதாரத் திணைக்களத்துக்கல்லவே''

இப்பத்திரிகை புதிய சமுதாய வெளியீட்டகத்தால் நியூ ஈரா பப்ளிக்கேசன் லிமிட்டெட் அச்சகத்தில் பங்குனி 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**அறிவாளி தன்னிடமுள்ள ரகசியத்தைத் தானே வைத்துக்கொள்வார்**